**//மிக மிக அவசரம்//** **// தேர்வுகள் தனி கவனம்//**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 903 /ஆ4/2022 நாள் 04 –04–2022

பொருள் வேலூர் மாவட்டம் – தேர்வுகள்– மார்ச்/ஏப்ரல் 2022 இடைநிலை / மேல்நிலை பொதுத்தேர்வுகள் – செய்முறை தேர்வுகள் மற்றும் தேர்வுப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கூட்டம் 07–04–2022 அன்று காலை 09.30 மணிக்கு நடைபெறுதல் சார்பு.

பார்வை 1.சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 616/எச்.1/2022 நாள் 30.03.2022

••••••

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க மே– 2022ம் மாதம் நடைபெறவுள்ள 10ம் வகுப்பு, 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மற்றும் செய்முறைத் தேர்வுகள் தொடர்பான ஆயத்தக்கூட்டம் வேலூர் மாவட்டம், வேலூர், லஷ்மி கார்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 07–04–2022 அன்று காலை 09.30 மணியளவில் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து உயர், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கட்டாயம் காலை 09.15மணிக்குள் வருகை புரிந்து கலந்துக்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் கீழ்க்குறிப்பிட்டுள்ள பொருள் சார்பாகவும் ஆயத்தக்கூட்டம் நடைபெறம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1. 10,11,12ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மற்றும் தேர்வு மையங்கள்
2. 10,11,12ம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள்
3. மாணவர்களின் வருகைப் பதிவு (EMIS) ஆய்வு செய்தல்
4. ஆசிரியர்களின் வருகைப் பதிவு (EMIS) ஆய்வு செய்தல்
5. 9,10,11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கான Basic Assesment Test ஆய்வு செய்தல்

ஒப்பம் (க. முனுசாமி),
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

அனைத்து உயர் , மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர்நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. வேலூர், காட்பாடி, கல்புதூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.
3. முதல்வர், லஷ்மிகார்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வேலூர் தகவலுக்காகவும் தொடர்நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.